**இலங்கை ஹதபிம அதிகாரசபை (இலங்கை பச்சைப் புல்வெளி அபிவிருத்தி மத்திய அதிகாரசபை) - 2012**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஹதபிம அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) பல்லேகலே பண்ணையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் ரூபா 547,868 பெறுமதியான 46,555 பொலிசெக் பொதிகள் இறுதி இருப்புக் கணிப்பின் போது கைவிடப்பட்டதன் காரணமாக பண்ணையின் மொத்த இலாபம் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபைக்குரிய 14 வாகனங்கள், 100 அலகு தளபாட உபகரணங்கள் மற்றும் 72 அலகு அலுவலக உபகரணங்கள் பெறுமானத்தேய்விடப்பட்டதை அடுத்து பெறுமதி ரூபா 1 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இச் சொத்துக்கள் மீள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிராமையால் மீள்பெறுமதியிடப்பட்ட மீதியில் பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிராமையால் பற்றாக்குறையும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களின் படியான மீதி | பதிவேட்டின் படியான மீதி | வேறுபாடு |
| | ரூபா | ரூபா | ரூபா |
| நாற்று மேடை – கொத்மலை | 504,594 | 501,310 | 3,284 |
| பயிர் இருப்பு – மேற்படி - | 2,690 | 520 | 2,170 |
| விலங்கின இருப்பு – மேற்படி | 196,820 | 201,750 | 4,930 |
| நாற்று மேடை – பல்லேகலை | 59,519 | 673,865 | 614,346 |
| விலங்கின இருப்பு – மேற்படி - | 1,579,990 | 1,322,675 | 257,315 |

### 1.2.3 பெற வேண்டிய, செலுத்த வேண்டிய கணக்குகள்

03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதிருந்த ரூபா.2,172,834 ஆன கடன்மீதிகளை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் கணக்கு மீதி, அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டிருக்கும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) பெறவேண்டிய வருமானம் | 15,463 | பட்டோலைகள் |
| (ஆ) காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2,094,281 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |

(இ) நிலையான சொத்துக்கள் 21,582,136 பௌதீக மெய்மையாய்வு அறிக்கைகள்

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (அ) | நி.பி. 103, 104 | அதிகாரசபையின் உத்தியோகபூர்வ வாகனங்கள் மீளாய்வாண்டின் போது 05 சந்தர்ப்பங்களின் போது விபத்திற்குள்ளாகியிருந்த போதிலும் இது தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் இதில் 03 சந்தர்ப்பங்களில் பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நி.பி. 396(ட) | 02 நடைமுறைக் கணக்குகளுக்கு உரித்தாக நிலவிய ரூபா 169,546 தொகையான காலாவதியாகிய 137 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிசார் விளைவுகள் ரூபா 32,601,898 தொகையான பற்றாக்குறையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 6,419,554 தொகையானமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 39,021,452 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது. மீண்டெழும் செலவினம் ரூபா 13,301,313 ஆல் அதிகரித்தமையும், மூலதனச் செலவினம் ரூபா 11,988,752 ஆல் அதிகரித்தமையும் விசேட செயற்திட்டச் செலவினம் ரூபா 3,212,459 தொகையால் அதிகரித்தமையும், கோழி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்காக பெறவேண்டிய ரூபா 3,022,763 தொகையான பணம் கிடைக்கப்பெற்றிராமையும் 2011 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 10,018,309 தொகையான செயற்திட்டச் செலவினங்கள் மீளாய்வாண்டின் செலவினமாக உள்ளடக்கப்படுவதும் இவ் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான சாத்தியவளக் கற்கையின்றி 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட மஹா இலுப்பள்ளம பண்ணை தோல்வியுற்ற காரணத்தால் 2012 மே மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. இத் தோட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,010,762 தொகையும் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 8,598,003 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அக் காலப்பகுதியின் போது உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 248,760 மாத்திரமேயாகக் காணப்பட்டது.

(ஆ) பகுதியளவில் வீட்டுக் கோழிக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் கீழ், கோழிக் கட்டுப்பாட்டின் மேம்பாட்டிற்காக பல்லேகலை பண்ணைக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,597,117 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டிற்கு உரித்தான பண்ணைச் செயற்பாடுகள் கணிப்பிடப்படுகையில், முன்னைய ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 161,390 தொகையான இலாபத்திற்கு எதிராக மீளாய்வாண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட நட்டம் ரூபா 1,139,805 ஆகக் காணப்பட்டது.

(இ) கொத்மலை பண்ணைக்கு உரித்தாக மீளாய்வாண்டின் போது ரூபா 367,973 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் முன்னைய இரு ஆண்டுகளின் போது முறையே ரூபா 643,710 தொகையும் ரூபா 8,564 தொகையுமான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கூட்டு விடுதி பராமரிப்பிற்காக ரூபா 252,021 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 18,520 மாத்திரமேயாகும்.

(உ) அதிகாரசபையிடமிருந்த ரூபா 5,000,000 தொகை 2012 ஒக்டோபர் மாதம் ஏழுநாள் அழைப்பு வைப்பில் 7 சதவீத வட்டியில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2013 மே மாதமளவிலும் இவ் வைப்புக்களில் ரூபா 4,000,000 தொகை எஞ்சியிருந்தமையால் இத் தொகை நீண்ட கால நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெறாது போயிருந்தது.

(ஊ) சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பெனடியன் சேதனப் பசளைச் செயற்திட்டம் 2012ஆம் ஆண்டில் மூடப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்திற்காக கடந்த இரண்டு ஆண்டுகளின் போது ரூபா 1,501,963 தொகை

செலவிடப்பட்டிருந்ததுடன் இக் காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த வருமானம் ரூபா 56,710 மாத்திரமாகும்.

**3.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

ஆட்சேர்ப்பு நடைமுறையில் காண்பிக்கப்பட்டுள்ள தகைமையைப் பூர்த்திசெய்திராத ஒருவர் 2012 ஏப்ரல் 03 ஆம் திகதி முதல் நிர்வாக உத்தியோகத்தர் பதவியில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு 2012 திசெம்பர் வரை சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 235,630 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

2011 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு ரூபா 344,832 பெறுமதியான 10 கி.கி பொலிசெக் உறைகளின் மீதி 28,736 ஆகக் காணப்பட்டதுடன் வருடாந்த பொதியிடல் உறைகளின் தேவைப்பாட்டின் படி அவ் இருப்பு எதிர்வரும் 24 வருடங்களுக்குப் போதுமானதாக இருக்கையில் முறையான திட்டம் இன்றி 2011 நவம்பர் 22 ஆம் திகதி ரூபா 125,000 செலவிடப்பட்டு மீள 12,500 உறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,461,564 தொகையும் கடந்த ஆண்டுகளின் போது ரூபா 7,313,404 தொகையும் செலவிட்டு அதிகாரசபைக்குச் சொந்தமற்ற காணிகளில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

**3.5 நிதிகளின் குறைப் பயன்பாடு**

மீளாய்வாண்டிற்காக 07 செலவு விடயங்கள் தொடர்பாக வருடாந்த திருத்தப்பட்ட பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,196,500 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.6 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்லேகலை சிறுவர் பாடசாலை, அதன் பண்ணையாலும் கொத்மலை பண்ணையாலும் பயன்படுத்தப்பட்ட 12 விடயங்களுக்கு உரித்தான ரூபா 127,794 பெறுமதியான உபகரணங்களும் பெறுமதி மதிப்பிடப்படாத 09 பல்வேறு விடயங்களுக்கு உரித்தான உபகரணங்களும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 03 ஆண்டுகாலம் முதல் வழங்கப்படாதுள்ள ரூபா 1,901,290 கூட்டுத்தொகையான 100 சொத்துப் பொருட்கள் விவசாய உபகரண இருப்பில் உள்ளடங்கியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஒதுக்கம் ரூபா 12,375,413 தொகையானதுடன் இத் தொகை ஆக்கபூர்வமான முதலீட்டில் ஈடுபடுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பல்லேகலை பண்ணையில் பேணப்படு வந்த பகுதியளவில் வீட்டுக் கோழிக் குஞ்சுகளின் உற்பத்திச் செயற்திட்டத்தின் விற்பனை விலைக்கு மேலாக உற்பத்தி மற்றும் பராமரிப்புச் செலவினம் மேற்கொள்ளப்பட்டமையால் 784 குஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு ரூபா 42,705 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. மேலும் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட கோழிக் குஞ்சுகள், ஒரு மாதம் வயதான கோழிக் குஞ்சுகளின் விலையில் விற்பனை செய்யப்பட்டமையால் 3726 கோழிக் குஞ்சுகளுக்காக பெறவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 312,942 தொகையான இலாபம் கிடைக்கப்பெறாது போயிருந்தது.

**3.8 பதவியிணியினர் நிருவாகம்**

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 01 | 01 | - |
| மூன்றாம் நிலை | 15 | 12 | 03 |
| இரண்டாம் நிலை | 43 | 41 | 02 |
| ஆரம்ப நிலை | 28 | 26 | 02 |
| | 87 | 80 | 07 |

அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 07 வெற்றிடங்கள் நிலவிய போதிலும், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 வாகனப் பயன்பாடு**

உத்தியோகபூர்வ கடமைகளுக்காக ஓர் வாகனத்தைப் பயன்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிராத பணிப்பாளருக்காக 2010 யூன் முதல் அதிகாரசபை வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபைத் தலைவரின் 2011 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய ஹஅ/பா/3/32-5219 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அவ் வாகனம் மீண்டும் அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 மே மாதம் வரையிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1. செயல்நடவடிக்கைத் திட்டம்**

செயற்பாட்டுத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ரூபா 134,145,618 தொகையான ஒதுக்கீடு

மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 86,448,513 தொகை அதாவது 64 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம், அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் சகல அரச கூட்டுத்தாபனத்தினாலும் உரிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்பட்டு இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்காக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் திருத்தப்பட்ட மதிப்பீடு மாத்திரம் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) திருத்தப்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட 11 செலவின விடயங்களுக்கு உரித்தான ரூபா 32,465,852 கூட்டுத்தொகையான சேமிப்புகள் காணப்பட்டதுடன் இவை திருத்தப்பட்ட ஏற்பாடுகளுடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்திலிருந்து 96 சதவீதம் வரையான வீச்சில் நிலவியது. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான ஓர் கட்டுப்பாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு
(ஈ) களஞ்சிய நிர்வாகம்
(உ) பண்ணை முகாமைத்துவம்